---

1. தேடற்பொறிக்கு உதாரணமாக அமைவது எது?

1. Google, MSN, Yahoo
2. Google chrome, internet explorer, Mozilla Firefox
3. Google, internet explorer, MSN
4. Google chrome, Yahoo, MSN

2. ஒற்றைக்குறிமுறையில் பயன்படுத்தப்படும் பிற்றுக்களின் எண்ணிக்கை யாது?

1. 4 2. 16 3. 7 4. 8

3. வரைபு வகைகள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

a - அதிக படமூலமும் உயர் பிரிதிறனையும் கொண்ட படமானது உயர் தரத்தைக் கொண்டிருக்கும்.

b- படமூலம் ஒன்றில் உள்ள பிட் அளவு 3 ஆயின் பயன்படுத்திய வர்ணங்களின் எண்ணிக்கை 8 ஆகும்.

c - பரவல் வரைபின் தரமானது அதனை நெருக்கமாக்கும் போது மாற்றமடையாது.

இவற்றுள் சரியானவை எவை?

1. b யும் c யும் 2. a யும் b யும் 3. a யும் c யும் 4. a, b, c எல்லாம்

4. பின்வரும் கூற்றுக்களை கருதுக.

a - வன்வட்டு பிரதான நினைவகத்திலும் பார்க்கக் கூடிய கொள்திறனைக் கொண்டுள்ளது.

b - மின்தொடுப்பு அகற்றப்படும்போது பிரதான நினைவகத்தில் உள்ள தரவுகள் இழக்கப்படும் அதேவேளை வன்வட்டில் உள்ள தரவுகள் இழக்கப்படுவதில்லை.

c - பிரதான நினைவகத்தில் உள்ள தரவுகளைத் தேக்கி வைப்பதற்கு காந்த ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மேலுள்ளவற்றில் சரியானது,

1. a யும் c யும் 2. a, b, c எல்லாம் 3. b யும் c யும் 4. a யும் b யும்

5. பதினறும எண் முறையில் D யினால் வகைக் குறிப்பது

1. 13 2. 12 3. 11 4. 14

6. பின்வருவனவற்றை கருதுக.

a - Landscape. b - Margins. c - Layout. d - Portrait.

இவற்றுள் எது சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளில் பக்க அமைப்புச் செய்வதற்கான திசைமுகங்கள் (Orientation) ஆகும்.

1. a யும் d யும் 2. a யும் b யும் 3. a யும் c யும் 4. b யும் c யும்

8. தகவல் தொடர்பாடல் தொழில்னுட்ப பயன்பாட்டுடன் தொடர்புடைய சுகாதார பிரச்சினைகளும் அது தொடர்பான விபரங்களும் கீழே தரப்பட்டுள்ளன. கூற்று சுகாதாரப் பிரச்சினை விபரம்

A மீள்வரும் தகைப்புக் காயம் தோளிலிருந்து கையின் விரல்கள் வரைக்கும் உண்டாகும் வலியாகும்.

B மணிக்கட்டுச் சுரங்கச் சகசம் தலை மற்றும் கழுத்துத் தசைகளுக்கிடையேயில் ஏற்படும் வலியாகும்

C கணினிப் பார்வை சகசம் கணினித் திரையைப் பார்த்துக் கொண்டிருப்பதால் கண்ணில் ஏற்படும் உறுத்தலாகும்

மேலுள்ள கூற்றுக்களில் உண்மையானது

1. b, c மட்டும் 2. a, b, c எல்லாம் 3. a, c மட்டும் 4. a, b மட்டும்

9. Student_ID என்ற புலத்திற்கு பொருத்தமான தரவு வகை யாது?

1. நாணயம் 2. பாடம் 3. எண் 4. திகதி/நேரம்

10. தரப்பட்ட உண்மை அட்டவணைக்கு பொருத்தமான தர்க்கப்படலை எது?

1. NOT(AND) 2. OR 3. NOT(OR) 4. AND

11. ……………………………………….ஒரு பணிச்செயல் முறைமை ஆகும்.

1. தரவுத்தள மென்பொருள் 2. Linux 3. முன்வைப்பு மென்பொருள். 4. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருள்

12. பின்வருவனவற்றில் எது கொள்ளளவு கூடிய தேக்கச் சாதனங்களாகும்?

*1. நினைவக அட்டை 2. இறுவட்டு 3. வன்வட்டு 4. பளிச்சீட்டு நினைவகம்*

*13. தகவலின் பண்பாக கருதமுடியாதது,*

*1. செம்மையானது 2. நம்பகத்தன்மை 3. முழுமையானது 4. தீர்மானம் எடுக்க முடியாதது*

*14. தரப்பட்ட HTML குறிமுறைகளில் தவறான குறிமுறை எது?*

*1. <font color= "red"> XXXXX </font> 2. <font colour = “red”>XXXXX</font>*

*3. <font face = “Times New Roman”>XXXXX</font> 4. <font size = “14”> XXXXX</font>*

*15. ”http://www.nie.lk/pages/syllabus.asp ” என்ற சீர்மை வள இடங்காணியில் எது ஆள்களப் பெயர் ஆகும்?*

*1. pages 2. syllabus.asp 3. http:// 4. nie.lk*

*16. தரவுத்தளமொன்றில் காணப்படும் வேறுபட்ட சாவிகள் தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.*

*a - அட்டவணையில் உள்ள பதிவு ஒன்றை தனித்துவமாக அடையாளங்கான முதன்மைச்சாவி பயன்படும்.*

*b - ஓர் அட்டவணையில் அந்நியச்சாவியாக காணப்படும் புலம் வேறு ஓர் அட்டவணையில் முதன்மைச்சாவியாக காணப்படும்.*

*c - இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட புலங்கள்களை இணைத்து சேர்மானச்சாவி உருவாக்கப்படும்.*

*இவற்றுள் சரியானவை எவை?*

*1. a யும் c யும் 2. a, b, c எல்லாம் 3. b யும் c யும் 4. a யும் b யும்*

*17. HTML ஆவணமொன்றில் <P> எனும் அடையாள ஒட்டு பயன்படுத்தப்படுது?*

*1. பந்தி ஒன்றை உள்ளிடல் 2. இலக்கப்பட்டியலை உள்ளிடல்*

*3. அட்டவணை ஒன்றை உட்செலுத்தல் 4. படம் ஒன்றை உட்செலுத்துதல்*

*18. Audio file இன் கோப்பு நீட்சியாக அமைவது*

*a. .avi b. .wmv c. .wav d. .bmb*

*19. தரப்பட்ட படமானது இலத்திரனியல் நிகழ்த்துகை மென்பொருளின் இடைமுகத்தில் கானப்படும் காட்சிப்படுத்தலின் வகைகளாகும். “A” என்ற எழுத்தினால் காட்டப்படுவது.*

*1. வாசிப்பு பார்வை 2. சாதாரண பார்வை*

*3. படவில்லை வரிசைப்படுத்தல் பார்வை 4. முழுமையான பார்வை*

*20. தசம எண் 204 இன் இரும எண் …………………………………… ஆகும்.*

*1. 110110002 2. 100110102 3. 101110012 4. 110011002*

*21. சொல் முறைவழிப்படுத்தல் ஆவணமொன்றில் உள்ள அனைத்து விடயங்களையும் தெரிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் குறுக்குச்சாவி எது?*

*1. Ctrl + O 2. Ctrl + A 3. Ctrl + C 4. Ctrl + V*

*22. பணித்தாள் ஒன்றின் பகுதி ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. A5 என்ற கலமானது =$A$2+A3 என்ற சூத்திரத்தைக் கொண்டுள்ளது. இச்சூத்திரத்தை B5 என்ற கலத்தினுள் உள்ளீடு செய்யும்போது அதன் வெளியீடானது எவ்வாறு அமையும்.*

*1. 15 2. 19 3. 27 4. 17*

*23. IOT(Internet of Things) இன் பண்பாக கருதமுடியாதது எது?*

*1. நுண்ணறிவு (Intelligence) 2. இணைப்பு (Connectivity)*

*3. பாதுகாப்பு (Safety) 4. செலவு (Cost)*

*24. சரியான மின்னஞ்சல் முகவரியினை குறிப்பது எது?*

*1. piumi@gov,com 2. mullai#gmail.com*

*3. Mullai_am3@yahoo.com 4. Aval s@gmail.com*

*25. பிரயோக மென்பொருளைக் மட்டும் கொண்ட தொகுதி எது?*

*1. Open office Writer, GIMP, Photoshop 2. Open office Calc, GIMP, Java*

*3. Ubuntu, MS Excel, Photoshop 4. Pascal, MS word, Windows 8*

*26. இரும எண் 10001101 இற்கு சமவலுவான தசம எண் யாது?*

*1. 145 2. 135 3. 141 4. 139*

27. அடிப்படைத் தர்க்கப் படலையாக அமையாதது எது?

1. AND 2. OR 3. NAND 4. NOT

28 .முகில் கணினியின் சேவையாக கருதமுடியாதது.

1. மென்பொருள் சேவை 2. அபிவிருத்தி சூழல் சேவை

3. உட்கட்டமைப்பு வசதிச்சேவை 4. இணைய சேவை

29. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

a - வன்வட்டில் தரவானது காந்தவியல் தொழினுட்பத்தைப் பயன்படுத்தி சேமிக்கப்படுகிறது.

b - இறுவட்டில் உள்ள தரவுகளை வாசிப்பதற்கும் சேமிப்பதற்கும் ஒளியியல் தொழினுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

c - நினைவக அட்டை ஓர் திண்மநிலைச் தேக்கச் சாதனமாகும்.

மேலுள்ளவற்றில் சரியானது,

1. a யும் b யும் 2. b யும் c யும் 3. a யும் c யும் 4. a, b, c எல்லாம்

30. சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளொன்றில் பயன்படுத்துகின்ற குறுக்குச் சாவிகள் மற்றும் அவற்றினால் மேற்கொள்ளப்படும் பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

a - பந்தியொன்றின் இரு ஓரங்களையும் நேர்ப்படுத்துவதற்கு Ctrl + J பயன்படுத்தப்படும்.
b - நிலைகாட்டியை (Cursor) படிவத்தின் தொடக்கத்துக்கு கொண்டு செல்வதற்கு Ctrl + Home பயன்படுத்தப்படும்.
c - பந்தியொன்றை இடப்பக்கமாக நேர்ப்படுத்துவதற்கு Ctrl + E பயன்படுத்தப்படும்.

இவற்றுள் சரியானவை

1. a யும் c யும் 2. b யும் c யும் 3. a யும் b யும் 4. a, b, c எல்லாம்

31. இலத்திரனியல் நிகழ்த்துகை தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கருதுக.
a - விசைப்பலகையில் உள்ள F5 சாவியை அழுத்துவதன் மூலம் முழுமையான பார்வைக்கு செல்ல முடியும்.
b - புதிய படவில்லையை உருவாக்குவதற்கு Ctrl + N எனும் குறுக்குச் சாவி பயன்படுத்தப்படுகிறது.
c - இலத்திரனியல் நிகழ்த்துகை ஒன்றிற்கு ஒலிகளை சேர்க்க முடியும்.
இவற்றுள் சரியானவை எவை?

1. b, c மட்டும் 2. a, c மட்டும் 3. a, b மட்டும் 4. a, b, c எல்லாம்

32. ஒரு மின்னஞ்சல் கணக்கில் தேவையற்ற மின்னஞ்சல்கள் சேமிக்கப்பட்டிருக்கும் இடம் எது?

1. Drafts 2. Trash/Delete 3. Sent 4. Spam/junk

33. பின்வருவனவற்றில் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டுச் சாதனமாக பயன்படுத்தக்கூடியது எது?

1. சுட்டி 2. விசைப்பலகை 3. தொடுதிரை 4. வருடி

34. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

a - இணையத்தில் இருந்து இலவச திறந்த மூல மென்பொருட்களை தரவிறக்கம் செய்து பிரதி எடுத்தல்.

b - அனுமதியின்றி பிறரின் ஒளிப்படத்தை இணையத்தில் பதவேற்றம் செய்தல்.

c - தனியாட்களின் நன்மதிப்பிற்கு பங்கம் ஏற்படும் வகையில் செய்திகளை இணையத்தில் வெளியிடல்.

இவற்றுள் இணையக்குற்றமாக கருதக்கூடியது

1. b, c மட்டும் 2. a, c மட்டும் 3. a, b மட்டும் 4. a, b, c எல்லாம்

35. ஒருவர் ரூபா 100 இனைக் கொடுத்து ரூபா 60 விலையுள்ள புத்தகம் ஒன்றையும் ரூபா 15 விலையுள்ள பேனா ஒன்றையும் வாங்கினார். அவரிடமுள்ள மீதி பணத்தின் இரும வடிவம் ……………………………………… ஆகும்.

1. 100112 2. 101112 3. 110002 4. 110012

36. முறைமையென்றின் அடிப்படைக் கூறாக கருதமுடியாதது எது?

1. தேக்கம் 2. உள்ளீடு 3. முறைவழியாக்கம் 4. வெளியீடு

37. பின்வருவனவற்றை கருதுக.

a - 3E. b - $E3. c - EE$3. d - $EE$3.

சரியான கலமுகவரிகளை காட்டுவது எது?

1. a, c, d மட்டும் 2. a, b மட்டும் 3. b, c, d மட்டும் 4. a, b, c மட்டும்